**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் உரை**

I have great pleasure in welcoming our Chief Guest Hon'ble President of India who has kindly consented to the request of the Hon'ble Chief Minister to grace this momentous occasion of the Centenary celebrations of the Tamilnadu Legislature and also to unveil the Portrait of former Chief Minister of Tamilnadu, **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.**

I also extend a very warm welcome to Hon’ble Governor of Tamil Nadu who has kindly consented to preside over the august function.

**இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிப்பவரும், ஆட்சிப் பொறுப்பேற்று 60 நாட்களில் கொரோனா என்னும் கொடிய நோயில் இருந்து தமிழக மக்களை காப்பாற்றியவரும், தமிழக மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவரும், ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமும் ஆன மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் என்ற வகையில் வரவேற்பதில் பெருமைப்படுகிறேன்.**

**இந்த விழாவைச் சிறப்பிக்க வருகை தந்துள்ள மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதியரசர் அவர்களையும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர்**

பெருமக்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு தலைமை அரசு கொறாடா அவர்களையும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர் பெருமக்களையும், வருகை புரிந்துள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், சிறப்பு அழைப்பாளர்களையும், அரசு அலுவலர்களையும், ஊடக நண்பர்களையும் இந்த இனிய மாலை வேளையில் வரவேற்பதில் அகமகிழ்கிறேன்.

1921–ம் ஆண்டு தொடங்கப்பட்ட அன்றைய சென்னை மாகாண சட்டமன்ற அவையில், இன்றைய ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளா, தெலுங்கானா, ஒடிசா ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளும் இடம் பெற்றிருந்தன. அந்த வகையில், இந்த பேரவையே இந்தியாவில் தென் மாநிலங்களின் தாய் சட்டமன்றப் பேரவையாக விளங்குகிறது.

இப்படிப் பெருமைவாய்ந்த இந்த சட்டமன்றத்தில் நூற்றாண்டு விழாவினை தொடங்கி வைக்கவும், இந்த பேரவையில் 5 முறை முதல்வராக பொறுப்பேற்று, இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வகையில் சிறப்பாகப் பணியாற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைக்கவும் வருகை தந்துள்ள மாண்புமிகு குடியரசு தலைவர் அவர்களுக்கு நான் மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில முதல்வர்களும், சுதந்திரத் தினத்தன்று கோட்டையில் கொடியேற்றும் உரிமையை 1972 முதல் இன்று வரை பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

வங்காள மொழி அறிஞர் கர்கா சட்டர்ஜி அவர்கள் கூறுகையில். "நாங்கள் இன்று ஆங்கிலம் படித்து உலகம் முழுவதும் சென்று பயனடைகிறோம் என்றால், அதற்கு காரணம் கலைஞரின் உறுதியான மொழிக் கொள்கைதான் என்றும், இது போல் தலைவர்கள் எங்கள் மாநிலத்தில் இல்லை" என்றும்;

கர்நாடக பாடலாசிரியர் சித்தார்த்தலிங்கம் அவர்கள் கூறும்போது "கலைஞர்தான் எங்களுக்கு தாய்மொழி உணர்வைத் தந்தவர்" என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேபோல் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் மூத்த ஆசிரியர் திரு. ஜார்ஜ் அவர்கள் "தமிழகத்தில் ஒரு தலைமுறைக்கே சாதித்து கொடுத்த ஒரே தலைவர் கலைஞர்தான்" என்று சொல்கிறார்.

இப்படி இந்தியா முழுவதும் பல்வேறு அறிஞர்களால் பாராட்டப்பட்ட தலைவர்தான் கலைஞர் அவர்கள். ஆகவே தான், அவரது மறைவிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாத ஒரு

தலைவரான, கலைஞருக்கு, இந்தியப் பாராளுமன்ற இரு அவைகளிலும், விளிம்பு நிலை மற்றும் அடிதட்டு மக்களின் வளர்ச்சிக்காக ஓய்வின்றி உழைத்தார் என்று புகழாரம் சூட்டி, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி, பாராளுமன்றம் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டதை நான் நினைவு கூர கடமைப்பட்டுயிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, தான் சந்தித்த தேர்தல்களில் ஒரு தேர்தலில் கூட தோல்வியைச் சந்திக்காமல் 13 முறை வென்று இப்பேரவையின் உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராகவும் இருந்து பேரவையின் மாண்பிற்கு மேலும் பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

சமூக நீதிக் காவலராக பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு, அருந்ததியருக்கான உள் ஒதுக்கீடு, இசுலாமியர்களுக்கான உள் ஒதுக்கீடு, பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகளுக்கான உரிமைகள், அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் என அனைத்துத் தரப்பினருக்குமான சட்டங்களை நிறைவேற்றிய அனைத்து பெருமையும் இந்த பேரவைக்கு மட்டுமே உள்ளதை போல், இவை அனைத்தையும் நிறைவேற்றிக் காட்டி இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழ்ந்தவர்

கலைஞர் அவர்கள் என்பது தமிழ்நாட்டிற்கே கிடைத்த மிகப் பெரிய பெருமையாக கருதுகிறோம்.

அத்தகைய பெருமைகளைக் கொண்ட முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவப் படத்தை திறந்து வைக்க வருகை தந்திருக்கும் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை தமிழ் மக்களின் சார்பாக மீண்டும் அன்போடு வரவேற்கின்றேன்.

மாண்புமிகு குடியரசு தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் அவர்கள், உத்தரப்பிரதேச மாநிலத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்தவர். சட்டம் பயின்று டெல்லியில் மிக சிறந்த வழக்கறிஞராக பணியாற்றிய போது ஏழை மக்களுக்கு இலவச சட்ட உதவிகளை செய்தவர். அவர் முத்தமிழறிஞர் கலைஞரின் திருஉருவப் படத்தை திறப்பது மிகவும் பொருத்தமானது.

மறைந்த சுதந்திரப் போராட்ட தலைவர் கோபாலகிருஷ்ண கோகலே அவர்களால் தொடங்கப்பட்ட ஹிட்டவாடா என்ற பத்திரிகையை நடத்த முடியாமல் தொய்வு ஏற்பட்ட போது அந்த பத்திரிகையை மாண்புமிகு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள் குடும்பத்தினர் வாங்கி இன்றளவும் நூற்றுண்டை கடந்து வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர். அரசியல் தலைவராக மட்டுமின்றி பத்திரிகையாளராகவும் பணியாற்றிய மாண்புமிகு தமிழக

ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்கள், தன்வாழ்நாள் முழுவதும் மிக சிறந்த பத்திரிகையாளராக விளங்கிய கலைஞரின் திருவுருவ படத்திறப்பு விழாவில் தலைமை ஏற்பதும் சாலப் பொருத்தமானதாகும்.

அறிஞர் அண்ணா சொன்னார். "மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடம் இருந்து கற்றுக் கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய், அவர்களுடன் திட்டமிடு'' என்றார்.

இந்த தத்துவத்தின் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது போல, "உழைப்பு, உழைப்பு, உழைப்பு" என மக்கள் பணியாற்றி, அந்த உழைப்பின் உயர்வாக இன்றைக்கு தமிழக முதலமைச்சராக வீற்றிருப்பவர் நமது முதல்வர் அவர்கள். ஆகவே அவர்களையும் மீண்டும் ஒரு முறை பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத் திறப்பு விழா நடைபெறும் விழாவில் பங்கேற்றுள்ள அனைவரையும் மீண்டும் ஒரு முறை அன்புடன் வரவேற்று அமர்கிறேன்.

நன்றி! வணக்கம்!

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9